# 046/2026-T

Question Booklet Alpha Code **A**

Question Booklet Serial Number

Total No. of questions : 100

Time : 1 Hour 30 Minutes

Maximum : 100 Marks

## INSTRUCTIONS TO CANDIDATES

1. The question paper will be given in the form of a Question Booklet. There will be four versions of question booklets with question booklet alpha code viz. A, B, C & D.
2. The Question Booklet Alpha Code will be printed on the top left margin of the facing sheet of the question booklet.
3. The Question Booklet Alpha Code allotted to you will be noted in your seating position in the Examination Hall.
4. If you get a question booklet where the alpha code does not match to the allotted alpha code in the seating position, please draw the attention of the Invigilator IMMEDIATELY.
5. The Question Booklet Serial Number is printed on the top right margin of the facing sheet. If your question booklet is un-numbered, please get it replaced by new question booklet with same alpha code.
6. The question booklet will be sealed at the middle of the right margin. Candidate should not open the question booklet, until the indication is given to start answering.
7. Immediately after the commencement of the examination, the candidate should check that the question booklet supplied to him contains all the 100 questions in serial order. The question booklet does not have unprinted or torn or missing pages and if so he/she should bring it to the notice of the Invigilator and get it replaced by a complete booklet with same alpha code. This is most important.
8. A blank sheet of paper is attached to the question booklet. This may be used for rough work.
9. **Please read carefully all the instructions on the reverse of the Answer Sheet before marking your answers.**
10. Each question is provided with four choices (A), (B), (C) and (D) having one correct answer. Choose the correct answer and darken the bubble corresponding to the question number using Blue or Black Ball-Point Pen in the OMR Answer Sheet.
11. **Each correct answer carries 1 mark and for each wrong answer 1/3 mark will be deducted. No negative mark for unattended questions.**
12. No candidate will be allowed to leave the examination hall till the end of the session and without handing over his/her Answer Sheet to the Invigilator. Candidates should ensure that the Invigilator has verified all the entries in the Register Number Coding Sheet and that the Invigilator has affixed his/her signature in the space provided.
13. Strict compliance of instructions is essential. Any malpractice or attempt to commit any kind of malpractice in the Examination will result in the disqualification of the candidate.

## 046/2026-T

Maximum : 100 marks

Time : 1 hour and 30 minutes

1. இந்திய அரசியலமைப்பு வரைவுக் குழுவின் தலைவர் யார்?

   (A) டாக்டர். ராஜேந்திர பிரசாத்

   (B) டாக்டர். பி.ஆர். அம்பேத்கர்

   (C) ஜவஹர்லால் நேரு

   (D) சர்தார் வல்லபாய் படேல்

2. இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபையின் முதல் மாநாடு எப்போது நடைபெற்றது?

   (A) 1946 டிசம்பர் 6 (B) 1946 டிசம்பர் 9

   (C) 1947 டிசம்பர் 6 (D) 1949 டிசம்பர் 9

3. அரசியலமைப்பின் வகுப்பு 368-இன் கீழ், அரசியலமைப்பைத் திருத்துவதற்கான அதிகாரம் யாருக்கு உள்ளது?

   (A) நாடாளுமன்றம் (B) மக்களவை

   (C) மாநிலங்களவை (D) உச்ச நீதிமன்றம்

4. தற்பொழுது எத்தனை அடிப்படை உரிமைகள் உள்ளன?

   (A) ஏழு (B) ஆறு

   (C) ஐந்து (D) எட்டு

5. இந்திய அரசியலமைப்பில் உள்ள 'அடிப்படை கடமைகள்' எந்த நாட்டிலிருந்து பெறப்பட்டன?

   (A) அயர்லாந்து (B) பிரிட்டன்

   (C) சோவியத் யூனியன் (D) கனடா

6. கேரளாவில் நிலவிய சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராக 'மிஸ்ரபோஜனம்' (Misrabhojanam) ஏற்பாடு செய்த மறுமலர்ச்சித் தலைவர் யார்?

   (A) அய்யன்காளி (B) வைகுண்ட சுவாமிகள்

   (C) சகோதரன் அய்யப்பன் (D) தைக்காடு அய்யா

7. கேரளாவில் உப்பு சத்தியாகிரகத்தை முன்னின்று நடத்தியவர் யார்?

(A) ஏ.கே. கோபாலன்
(B) கே. மாதவன் நாயர்
(C) கே. கேளப்பன்
(D) என்.வி. கிருஷ்ணவாரியர்

8. குளச்சல் போர் எந்த ஆண்டில் நடைபெற்றது?

(A) 1741
(B) 1841
(C) 1742
(D) 1842

9. இந்தியாவில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக நடைபெற்ற முதல் ஒருங்கிணைந்த கிளர்ச்சி எது?

(A) குளச்சல் போர்
(B) வேலூர் கிளர்ச்சி
(C) ஆற்றிங்கல் கிளர்ச்சி
(D) அஞ்சு தெங்கு கிளர்ச்சி

10. 'சுதேசாபிமானி' நாளிதழின் நிறுவனர் யார்?

(A) கே. ராமகிருஷ்ண பிள்ளை
(B) வக்கம் மௌலவி
(C) வக்கம் அப்துல் ரஹ்மான்
(D) சி. கேசவன்

11. 'சர்வண்ட்ஸ் ஆஃப் இந்தியா சொசைட்டி'யை நிறுவியவர் யார்?

(A) பாலகங்காதர திலகர்
(B) சுபாஷ் சந்திர போஸ்
(C) கோபாலகிருஷ்ண கோகலே
(D) சர்தார் வல்லபாய் படேல்

12. 'இந்திய சுதந்திரப் போராட்டத்தின் மூத்த பெண்மணி' என அழைக்கப்படுபவர்:

(A) சரோஜினி நாயுடு
(B) அன்னி பெசன்ட்
(C) அருணா ஆசிப் அலி
(D) அக்கம்மா செரியன்

13. பின்வருவனவற்றை பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (i) | சம்பாரண் சத்தியாகிரகம் | (a) | 1930 |
| (ii) | ஒத்துழையாமை இயக்கம் | (b) | 1942 |
| (iii) | உப்பு சத்தியாகிரகம் | (c) | 1920 |
| (iv) | வெள்ளையனே வெளியேறு இயக்கம் | (d) | 1917 |

(A) (i)-(d), (ii)-(c), (iii)-(a), (iv)-(b)

(B) (i)-(d), (ii)-(a), (iii)-(c), (iv)-(b)

(C) (i)-(c), (ii)-(b), (iii)-(d), (iv)-(a)

(D) (i)-(c), (ii)-(d), (iii)-(b), (iv)-(a)

14. ''கதக்'' (Kathak) என்பது எந்த மாநிலத்தின் தனித்துவமான கலை வடிவமாகும்?

(A) மத்தியப் பிரதேசம் (B) உத்தரப் பிரதேசம்

(C) அசாம் (D) மணிப்பூர்

15. இந்திய விடுதலைப் போராட்டத்தின் ஒரு பகுதியாக 'சுதேசி இயக்கம்' எந்த ஆண்டில் தொடங்கியது?

(A) 1905 ஆகஸ்ட் 8 (B) 1905 ஆகஸ்ட் 7

(C) 1905 அக்டோபர் 8 (D) 1905 அக்டோபர் 7

16. முதலாவது BRICS இளைஞர் விழா நடைபெற்ற இடம்:

(A) பிரிட்டன் (B) இந்தியா

(C) ரஷ்யா (D) சீனா

17. இந்தியாவின் முதல் 'டிஜிட்டல் கிரீன்ஃபீல்ட்' (Greenfield) விமான நிலையம் எது?

(A) நவி மும்பை

(B) கெம்பேகவுடா விமான நிலையம்

(C) கொச்சி விமான நிலையம்

(D) லக்னோ விமான நிலையம்

18. பின்வரும் வாக்கியங்களை, எந்தச் சுதந்திரப் போராட்ட வீரரின் மறைவைப் பற்றிக் குறிப்பிடும்போது நேரு கூறினார்?
"நம் வாழ்விலிருந்து ஒளி மறைந்துவிட்டது. எங்கும் இருளே சூழ்ந்துள்ளது."

(A) பாலகங்காதர திலகர்
(B) லாலா லஜபதி ராய்
(C) மகாத்மா காந்தி
(D) சந்திரசேகர் ஆசாத்

19. 1966 ஜனவரி 10 அன்று நடைமுறைக்கு வந்த தாஷ்கண்ட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடுகள் எவை?

(A) இந்தியா மற்றும் பிரிட்டன்
(B) இந்தியா மற்றும் பாகிஸ்தான்
(C) இந்தியா மற்றும் ரஷ்யா
(D) இந்தியா மற்றும் சீனா

20. இந்திய ஒன்றியத்துடன் சுதேச அரசுகளை இணைப்பதற்காக 'இணைப்பு ஒப்பந்தம்' (Merger Agreement) உருவாக்கப்பட்டது. இந்த இணைப்பு ஒப்பந்தத்தை வடிவமைத்தவர்கள் யார்?

(i) சர்தார் வல்லபாய் படேல்
(ii) ஜவஹர்லால் நேரு
(iii) மௌலானா அபுல் கலாம் ஆசாத்
(iv) வி.பி. மேனன்

(A) (i) மற்றும் (ii)
(B) (iii) மற்றும் (iv)
(C) (i) மற்றும் (iv)
(D) இவற்றுள் ஏதுமில்லை

21. பொகாரோவில் இரும்பு மற்றும் எஃகுத் தொழில், எந்த அயல்நாட்டின் உதவியுடன் நிறுவப்பட்டது?

(A) பிரிட்டன்
(B) ஜெர்மனி
(C) ஜப்பான்
(D) சோவியத் யூனியன்

**22.** 1950 ஆம் ஆண்டு மார்ச் 15 ஆம் தேதி நடைமுறைக்கு வந்த திட்டக் குழுவின் துணைத் தலைவராக இருந்தவர் யார்?

(A) டி.டி. கிருஷ்ணமாச்சாரி
(B) குல்சாரிலால் நந்தா
(C) சி.டி. தேஷ்முக்
(D) வினாயக் சௌத்ரி

**23.** இந்தியாவின் தலைமைத் தேர்தல் ஆணையர் யார்?

(A) டாக்டர் சுக்பீர் சந்து
(B) டாக்டர் விவேக் ஜோஷி
(C) திரு. ஞானேஷ் குமார்
(D) திரு. அருண் கோயல்

**24.** 2023 ஆம் ஆண்டில் மலையாள சினிமாவில் சிறந்த பங்களிப்பிற்காக ஜே.சி.டேனியல் விருதைப் பெற்றவர் யார்?

(A) ஸ்ரீகுமாரன் தம்பி
(B) ஷாஜி என். கருண்
(C) ஹரிஹரன்
(D) எம்.டி. வாசுதேவன் நாயர்

**25.** இந்தியாவில் மூன்று வேளாண் பருவங்கள் உள்ளன; அவை காரிஃப் (Kharif), ரபி (Rabi) மற்றும் ஜைத் (Zaid) என்பனவாகும். இவ்வேளாண் பருவங்களின் சிறப்பம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் சரியானவற்றைத் தேர்ந்தெடுக்கவும்:

(i) காரிஃப் பருவம் தென்மேற்குப் பருவமழையுடன் தொடர்புடையது

(ii) ஜைத் என்பது ஒரு குறுகிய கால கோடைக்கால வேளாண் பருவமாகும்

(iii) ரபி என்பது கோதுமை, பயறு வகைகள், கடுகு போன்றவற்றைச் பயிரிடுவதற்கான பருவமாகும்

(iv) ரபி பருவம் பிப்ரவரி மாதத்தில் முடிவடைகிறது

(A) (i) மற்றும் (ii) ஆகிய இரண்டும் சரியானவை
(B) இவற்றில் எதுவும் சரியானவை அல்ல
(C) இவை அனைத்தும் சரியானவை
(D) (ii), (iii), (iv) ஆகியவை மட்டுமே சரியானவை

**26.** பின்வரும் நாடுகளில் எவை இந்தியாவுடன் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன?

(i) மியான்மர், ஆப்கானிஸ்தான், மாலத்தீவுகள், சீனா

(ii) பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இலங்கை, சீனா

(iii) பாகிஸ்தான், பூடான், மியான்மர், ஆப்கானிஸ்தான்

(iv) சீனா, வங்கதேசம், நேபாளம், பாகிஸ்தான்

(A) (i) மற்றும் (iii)

(B) (iii) மற்றும் (iv)

(C) (ii) மற்றும் (iv)

(D) இவை அனைத்தும்

**27.** கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை ஆராய்ந்து, தவறானவற்றை கண்டறியவும்:

(i) இந்தியாவில் மிகவும் பரவலாகக் காணப்படும் வண்டல் மண்வகை வடபெரும் சமவெளியில் காணப்படுகிறது.

(ii) தார் பாலைவனம் இராஜஸ்தானில் அமைந்துள்ளது.

(iii) செம்மண் பெரும்பாலும் இந்திய பீடபூமிப் பகுதியில் காணப்படுகிறது.

(iv) மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடர் தமிழ்நாட்டிலிருந்து ஒரிசா வரை நீண்டுள்ளது.

(A) இவை அனைத்தும்

(B) (i), (iii), (iv) சரியானவை

(C) (iii), (iv) சரியானவை

(D) (i), (ii) சரியானவை

**28.** இந்தியாவின் மிகப் பழமையான மலைத்தொடர்கள் எவை?

(A) மேற்குத் தொடர்ச்சி மலைகள்

(B) கிழக்குத் தொடர்ச்சி மலைகள்

(C) ஆரவல்லி

(D) சாத்பூரா

**29.** பின்வருவனவற்றில் எது வட இந்தியச் சமவெளிகளின் சிறப்பியல்பு அல்ல?

(i) வளமான மண்

(ii) ஆறுகளால் நன்கு நீர்ப்பாசனம் பெறுதல்

(iii) சமமான நிலப்பரப்பு

(iv) அதிக மக்கள் தொகை அடர்த்தி

(A) (i) மற்றும் (iv)

(B) இவை எதுவுமில்லை

(C) (iii) மற்றும் (iv)

(D) இவை அனைத்தும்

30. 2025ல் ICC மகளிர் உலகக் கோப்பையில் இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் கேப்டன் யார்?

(A) ஸ்மிருதி மந்தனா

(B) ஹர்மன்ப்ரீத் கவுர்

(C) ஷஃபாலி வர்மா

(D) பிரத்திகா ராவன்

31. இந்தியத் திரைப்படத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பிற்காக, 2023-ஆம் ஆண்டில் தாதாசாகேப் பால்கே விருது யாருக்கு வழங்கப்பட்டது?

(A) அமிதாப் பச்சன்

(B) கமல்ஹாசன்

(C) அடூர் கோபாலகிருஷ்ணன்

(D) மோகன்லால்

32. முண்டக்கை மற்றும் சூரல்மலை நிலச்சரிவுகளைத் தொடர்ந்து நெருக்கடிக்குள்ளான வயநாடு சுற்றுலாவை மீட்டெடுப்பதற்காக, சுற்றுலாத் துறையால் தொடங்கப்பட்ட பிரச்சாரத்தின் பெயர் என்ன?

(A) என்டே கேரளம் எத்ர சுந்தரம்

(B) என்டே கேரளம் என்னும் சுந்தரம்

(C) ஹரித கேரளம்

(D) இனி நான் ஒழுக்கட்டே

33. சர்வதேச விண்வெளி நிலையத்திற்குச் சென்ற முதல் ISRO விண்வெளி வீரர் யார்?

(A) சுபம்ஷு சுக்லா

(B) பிரசாந்த் பி. நாயர்

(C) அஜித் கிருஷ்ணன்

(D) அங்கத் பிரதாப்

34. கேரளாவின் எந்த திசையில் மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடர்கள் அமைந்துள்ளன?

(A) கிழக்கு

(B) மேற்கு

(C) தெற்கு

(D) வடக்கு

35. ஆறுகளும் அவற்றின் தோற்றங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் தவறானதைத் தேர்ந்தெடுக்கவும்:

(i) நெய்யாறு – அகத்தியமலை

(ii) பெரியாறு – சிவகிரி மலை

(iii) பாரதப்புழா – ஆனைமலை

(iv) பம்பா – நீலகிரி

(A) (ii) மற்றும் (iii)

(B) (i) மற்றும் (ii)

(C) (iv) மட்டும்

(D) (i) மட்டும்

36. கேரளாவில் உள்ள நீர்மின் திட்டங்கள் குறித்துப் பின்வரும் கூற்றுகளில் எவை சரியானவை?

(i) கேரளாவில் மின் உற்பத்தியின் மிகப்பெரிய ஆதாரம் நீர்மின்சக்தி ஆகும்.

(ii) தென்மலை நீர்மின் திட்டம் கேரளாவின் மிகப்பெரிய நீர்மின் திட்டமாகும்.

(iii) கேரளாவில் அதிக எண்ணிக்கையிலான நீர்மின் திட்டங்கள் அமைந்துள்ள ஆறு பாரதப்புழா ஆகும்.

(iv) இடுக்கி மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான நீர்மின் திட்டங்கள் அமைந்துள்ளன.

(A) கூற்றுகள் (i), (ii), (iii) ஆகியவை சரியானவை

(B) கூற்றுகள் (ii), (iii), (iv) ஆகியவை சரியானவை.

(C) கூற்றுகள் (ii), (iii) ஆகியவை சரியானவை.

(D) கூற்றுகள் (i), (iv) ஆகியவை சரியானவை.

37. கேரளாவின் மிகச்சிறிய மாவட்டம் எது?

(A) பத்தனம்திட்டா

(B) ஆலப்புழா

(C) திருச்சூர்

(D) எர்ணாகுளம்

**38.** கேரளாவில் உள்ள உள்ளாட்சித் துறை மேற்பார்வையிடும் முன்னெடுப்புகளும், அவற்றின் நோக்கங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு முன்னெடுப்பின் நோக்கத்தைக் குறிக்கும் சரியான விருப்பத்தைத் தேர்ந்தெடுக்கவும்:

| முன்னெடுப்பு | | நோக்கம் | |
|---|---|---|---|
| (i) | சுபோஜனம் | (a) | சுகாதாரமான மற்றும் பாதுகாப்பான உணவு விநியோகத்தை உறுதி செய்தல் |
| (ii) | ஆஸ்வாஸ் | (b) | நீர்நிலைகளை மக்கள் பங்கேற்புடன் மீட்டெடுத்தல் |
| (iii) | இனி நான் ஒழுக்கட்டே | (c) | தரிசு நிலங்களை கண்டறிந்து இயற்கை பல்லுயிர் பெருக்கப் பகுதிகளாக மாற்றி பாதுகாத்தல் |
| (iv) | பச்சத்துருத்து | (d) | சிறுநீரக நோயாளிகளுக்கு இலவச டயாலிசிஸ் சிகிச்சை அளித்தல் |

(A) (i)-(b), (ii)-(a), (iii)-(d), (iv)-(c)
(B) (i)-(a), (ii)-(b), (iii)-(d), (iv)-(c)
(C) (i)-(a), (ii)-(d), (iii)-(b), (iv)-(c)
(D) (i)-(d), (ii)-(c), (iii)-(b), (iv)-(a)

**39.** பின்வரும் அறிக்கைகள் எந்த வனவிலங்கு சரணாலயத்தைப் பற்றியது என்பதைக் கண்டறியவும்:

(i) கேரளாவின் முதல் வனவிலங்கு சரணாலயம்

(ii) பீரிமேடு தாலுக்காவில் அமைந்துள்ளது

(iii) இந்த வனவிலங்கு சரணாலயத்திற்குள் மங்களா தேவி கோவில் அமைந்துள்ளது

(iv) கேரளாவின் மிகப்பெரிய வனவிலங்கு சரணாலயம்

(A) ஆரளம் வனவிலங்கு சரணாலயம்
(B) பெரியார் வனவிலங்கு சரணாலயம்
(C) பரம்பிக்குளம் வனவிலங்கு சரணாலயம்
(D) செந்துருணி வனவிலங்கு சரணாலயம்

**40.** கேரளக் கடற்கரைப் பகுதியில் மிகவும் அதிக அளவில் காணப்படும் மீன் எது?

(A) மத்தி
(B) அயிலை
(C) சூரை
(D) இறால்

41. கேரளாவில் ரயில் பாதை இல்லாத மாவட்டங்கள் யாவை?

(i) வயநாடு

(ii) இடுக்கி

(iii) பத்தனம்திட்டா

(iv) ஆலப்புழா

(A) (i), (iv)

(B) (i), (ii)

(C) (ii), (iii)

(D) (i), (iii)

42. 2025 கல்வியாண்டிற்கான கேரள பள்ளி ஒலிம்பிக்கின் பிராண்ட் தூதராக தேர்ந்தெடுக்கப்பட்ட விளையாட்டு வீரர் யார்?

(A) பி.டி. உஷா

(B) ஶ்ரீசாந்த்

(C) சஞ்சு சாம்சன்

(D) சி.கே. வினீத்

43. வேம்பநாடு ஏரி எந்தெந்த மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது?

(i) ஆலப்புழா

(ii) எர்ணாகுளம்

(iii) கோட்டயம்

(iv) கொல்லம்

(A) (i) மற்றும் (iv)

(B) (i), (ii) மற்றும் (iv)

(C) (i), (ii) மற்றும் (iii)

(D) (ii), (iii) மற்றும் (iv)

44. பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

(i) வெப்பமண்டலத்தின் (Thermosphere) கீழ்ப்பகுதி அயனமண்டலம் (Ionosphere) என்று அழைக்கப்படுகிறது.

(ii) கேரளாவின் சராசரி ஆண்டு மழைப்பொழிவு 3000 செ.மீ ஆகும்.

(iii) கேரளாவில் உற்பத்தியாகும் மின்சாரத்தில் பெரும்பகுதி, இடுக்கி மாவட்டத்தில் அமைந்துள்ள நீர்மின் நிலையத்திலிருந்து பெறப்படுகிறது.

(iv) செயற்கைக்கோள்களை இயக்குவதற்கான மின்சாரம் பெட்ரோலிலிருந்து பெறப்படுகிறது.

(A) அனைத்தும் சரியானவை

(B) (ii), (iii) மற்றும் (iv)

(C) (i) மற்றும் (iii)

(D) (ii) மற்றும் (iv)

45. பின்வரும் கூற்றுகளில் எது சரியானது அல்ல?

(i) 2021-ஆம் ஆண்டில், நாட்டின் சிறந்த பெண் பாடகிக்கான தேசிய திரைப்பட விருதை நஞ்சியம்மா வென்றார்.

(ii) புகழ்பெற்ற ஓவியமான "சதி" (Sati) என்பது அம்ரிதா ஷெர்கிலால் வரையப்பட்டது.

(iii) "கேரளத்தின் அம்ரிதா ஷெர்கில்" என்று வர்ணிக்கப்படும் ஓவியர் டி.கே. பத்மினி ஆவார்.

(A) (i) மற்றும் (ii)
(B) (ii) மற்றும் (iii)
(C) (i) மற்றும் (iii)
(D) (i), (ii) மற்றும் (iii)

46. ஞானபீட விருது தொடர்பான தவறான கூற்றைக் கண்டறியவும்:

(i) ஜி. சங்கரகுருப்பிற்குப் பிறகு ஞானபீட விருதைப் பெற்ற மலையாளி தகழி சிவசங்கரப் பிள்ளை ஆவார்.

(ii) ஞானபீட விருதைப் பெற்ற முதல் பெண்மணி ஆஷாபூர்ணாதேவி ஆவார்.

(iii) ஞானபீட விருது மற்றும் மூர்த்தி தேவி விருது பெற்ற மலையாளி அக்கிதம் அச்சுதன் நம்பூதிரி ஆவார்.

(A) (ii) மற்றும் (iii)
(B) (i) மட்டும்
(C) (ii) மட்டும்
(D) (iii) மட்டும்

47. பின்வருவனவற்றுள் சரியான கூற்றுகளைக் கண்டறிக:

(i) பாலக்காட்டைச் சேர்ந்த சந்தீப் உன்னிகிருஷ்ணன், நவம்பர் 2008-இல் மும்பையில் பாகிஸ்தானியத் தீவிரவாதிகளுடனான மோதலில் வீரமரணம் அடைந்ததற்காக, நாட்டினால் 'அசோக் சக்ரா' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட ஒரு வீரமிக்க படைவீரர் ஆவார்.

(ii) திருவனந்தபுரத்தைச் சேர்ந்த ஜெர்ரி பிரேம் ராஜ், 1999-ஆம் ஆண்டின் கார்கில் போரின்போது வீரமரணம் அடைந்ததற்காக, நாட்டினால் 'வீர் சக்ரா' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட ஒரு வீரமிக்க படைவீரர் ஆவார்.

(iii) எர்ணாகுளத்தைச் சேர்ந்த ஆர். விஸ்வநாதன், 1999-ஆம் ஆண்டு நடைபெற்ற கார்கில் போரின்போது ஆற்றிய வீரச் செயல்களுக்காக, நாட்டினால் 'வீர் சக்ரா' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட ஒரு வீரமிக்க படைவீரர் ஆவார்.

(A) (i) மட்டும்
(B) (ii) மற்றும் (iii)
(C) (ii) மட்டும்
(D) அனைத்தும் சரியானவை

**48.** 2024, 20-20 கிரிக்கெட் உலகக் கோப்பையில், முறையே 'தொடரின் சிறந்த வீரர்' மற்றும் 'போட்டியின் சிறந்த வீரர்' எனத் தேர்ந்தெடுக்கப்பட்ட விளையாட்டு வீரர்கள் யார்?

(A) ஜஸ்பிரித் பும்ரா - விராட் கோலி

(B) விராட் கோலி - ஜஸ்பிரித் பும்ரா

(C) விராட் கோலி - ரோஹித் சர்மா

(D) ரோஹித் சர்மா - விராட் கோலி

**49.** 2023-ஆம் ஆண்டின் நோபல் பரிசு வெற்றியாளர்கள் தொடர்பான சில தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் சரியானவற்றைத் தேர்ந்தெடுக்கவும்:

(i) ஜான் ஃபாஸ்ஸே - இலக்கியம் - நார்வே நாடக ஆசிரியர்

(ii) நர்கிஸ் முகமதி - அமைதி - வங்கதேச மனித உரிமைச் செயற்பாட்டாளர்

(iii) கிளாடியா கோல்டின் - பொருளாதாரம் - அமெரிக்கப் பொருளியலாளர்

(A) (i) மற்றும் (ii)

(B) (ii) மற்றும் (iii)

(C) (i) மற்றும் (iii)

(D) அனைத்தும் சரியானவை

**50.** உலகின் முக்கிய பொருளாதார வல்லரசுகளின் கூட்டமைப்பான G20 குறித்து, தவறான கூற்றுகளைக் கண்டறிக:

(i) இதற்குத் தனியான தலைமையகம் ஏதுமில்லை

(ii) இதன் தலைமைப் பொறுப்பு, ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கும் ஒருமுறை உறுப்பு நாடுகளுக்கு இடையே சுழற்சி முறையில் மாறுகிறது

(iii) G20-இன் ஒருங்கிணைப்பாளர்கள் 'ஷெர்பா' (Sherpa) என்று அழைக்கப்படுகின்றனர்

(A) (ii) மற்றும் (iii)

(B) (i) மற்றும் (ii)

(C) (i) மற்றும் (iii)

(D) (i), (ii) மற்றும் (iii)

**51.** ரஷ்யா-உக்ரைன் மோதலில் சிக்கித் தவித்த இந்தியர்களை மீட்டுவர மத்திய அரசால் தொடங்கப்பட்ட மீட்புப் பணி:

(A) ஆபரேஷன் கங்கா

(B) ஆபரேஷன் கருடா

(C) ஸ்மைல் 75

(D) அக்னிபாத்

**52.** கேரளாவில் ஏற்படும் நிலச்சரிவுகள் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது தவறானது?

(i) ஆலப்புழா என்பது கேரளாவில் நிலச்சரிவு அபாயம் இல்லாத ஒரு மாவட்டமாகும்

(ii) ஆகஸ்ட் 8, 2019 அன்று, பாலக்காடு மாவட்டத்தில் உள்ள புதுமலையில் ஒரு நிலச்சரிவு ஏற்பட்டது

(iii) ஆகஸ்ட் 6, 2020 அன்று, இடுக்கி மாவட்டத்தில் உள்ள பெட்டிமுடியில் ஒரு நிலச்சரிவு ஏற்பட்டது

(A) அனைத்தும் சரியானவை

(B) (i) மட்டும்

(C) (ii) மட்டும்

(D) (iii) மட்டும்

**53.** பின்வரும் தாவரங்களில் எது, பாலியல் மற்றும் பாலிலா இனப்பெருக்கம் ஆகிய இரு முறைகள் மூலமும் புதிய நாற்றுகளை உருவாக்குகிறது?

(A) மலைக்கள்ளி

(B) பப்பாளி

(C) முருங்கை

(D) சீமைப்பலா

**54.** செரிமான நீர்களைச் சுரப்பது தொடர்பாகப் பின்வரும் இணைகளில் எவை சரியானவை?

| | | | |
|---|---|---|---|
| (i) | கல்லீரல் | : | பித்தநீர் |
| (ii) | உணவுக்குழாய் | : | ஹைட்ரோகுளோரிக் அமிலம் |
| (iii) | கணையம் | : | கணைய நீர் |

(A) (i) மற்றும் (ii) ஆகிய இரண்டும் சரியானவை

(B) (i) மற்றும் (iii) ஆகிய இரண்டும் சரியானவை

(C) (i) மட்டும் சரியானது

(D) (ii) மற்றும் (iii) ஆகிய இரண்டும் சரியானவை

**55.** எலும்புகள் மெலிந்து வளையும் தன்மையைப் பெறும் என்புருக்கி நோய் (Rickets), எந்த வைட்டமின் குறைபாட்டால் ஏற்படுகிறது?

(A) வைட்டமின் A
(B) வைட்டமின் B
(C) வைட்டமின் C
(D) வைட்டமின் D

**56.** சில உணவுத் தொடர் உறவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் தவறான ஒன்றைக் கண்டறியவும்:

(A) புல் → ஆடு → புலி → பருந்து
(B) புல் → வெட்டுக்கிளி → முயல் → சிங்கம்
(C) புல் → புழு → கோழி → பாம்பு
(D) புல் → வெட்டுக்கிளி → தவளை → பாம்பு

**57.** கேரள வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் (KAU) தலைமையிடமான 'மன்னுத்தி' (Mannuthi), எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?

(A) திருச்சூர்
(B) திருவனந்தபுரம்
(C) காசர்கோடு
(D) வயநாடு

**58.** 'பவித்ரா' மற்றும் 'அன்னபூர்ணா' என்பவை எந்தப் பயிரின் கலப்பின விதைகளாகும்?

(A) மிளகாய்
(B) பருப்பு
(C) நெல்
(D) தென்னை

**59.** கேரளாவில் மனித உயிரிழப்புகளை அதிகம் ஏற்படுத்திய காட்டு விலங்கு எது?

(A) காட்டு யானை
(B) சிறுத்தை
(C) காட்டுப்பன்றி
(D) புலி

**60.** உலக கத்தோலிக்கத் திருச்சபையின் தற்போதைய தலைவர் யார்?

(A) பிரான்சிஸ்
(B) லியோ XIV
(C) பெனடிக்ட் XVI
(D) ஜான் பால் II

**61.** ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதலுக்கு எதிராக இந்திய இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் பெயர் என்ன?

(A) ஆப்பரேஷன் ப்ளூஸ்டார்
(B) ஆப்பரேஷன் மேகதூத்
(C) ஆப்பரேஷன் விஜய்
(D) ஆப்பரேஷன் சிந்தூர்

**62.** அலுமினியத்தின் தாது எது?

(A) பாக்சைட்
(B) ஹேமடைட்
(C) கலமைன்
(D) மேக்னடைட்

**63.** ஒளி எந்த ஊடகத்தில் மிக வேகமாகப் பயணிக்கிறது?

(A) கண்ணாடி
(B) நீர்
(C) வெற்றிடம்
(D) வைரம்

**64.** தீயணைப்பான்களில் எந்த வாயு பயன்படுத்தப்படுகிறது?

(A) ஹைட்ரஜன்
(B) கார்பன் டை ஆக்சைடு
(C) ஆக்ஸிஜன்
(D) மீத்தேன்

**65.** ஒலிச் செறிவானது எந்த அலகில் அளவிடப்படுகிறது?

(A) ஹெர்ட்ஸ்
(B) வாட்
(C) டெசிபல்
(D) ஆம்பியர்

**66.** மின்சாரம் உற்பத்தி செய்வதற்காகக் கட்டப்பட்ட அணைகளின் நீர்த்தேக்கங்களில் நீர் சேமித்து வைக்கப்படுகிறது. இந்த நீர்த்தேக்கத்தில் உள்ள நீரின் ஆற்றல் என்ன?

(A) இயக்க ஆற்றல்
(B) இயந்திர ஆற்றல்
(C) இவை எதுவுமில்லை
(D) நிலையாற்றல்

**67.** நாம் உண்ணும் உணவின் செரிமானம் ________-இல் நிறைவடைகிறது. அந்த உறுப்பைக் கண்டறிக.

(A) இரைப்பை
(B) சிறுகுடல்
(C) பெருங்குடல்
(D) மலக்குடல்

**68.** நீரிழிவு நோய் என்பது இரத்தத்தில் குளுக்கோஸ் அளவு அதிகரிப்பதாகும். இரத்தத்தில் குளுக்கோஸின் இயல்பான அளவு என்ன?

(A) 80-100 mg/100 ml
(B) 90-110 mg/100 ml
(C) 70-120 mg/100 ml
(D) 70-110 mg/100 ml

**69.** பெண்களின் பாதுகாப்பிற்காக கேரள அரசால் செயல்படுத்தப்பட்ட திட்டம்:

(A) நிர்பயா  (B) ஆஸ்ரய
(C) உஷஸ்  (D) கனிவு

**70.** பின்வருவனவற்றுள் காற்று மூலம் பரவும் நோய்கள் எவை?
காலரா, சிக்குன்குனியா, சின்னம்மை, காசநோய்

(A) காலரா, சிக்குன்குனியா  (B) காசநோய், காலரா
(C) காசநோய், சிக்குன்குனியா  (D) காசநோய், சின்னம்மை

**71.** எய்ட்ஸ்/HIV தொற்று தொடர்பான பின்வரும் கூற்றுகளை ஆராய்ந்து, அவற்றில் எவை தவறானவை என்பதைக் கண்டறியவும்:

(i) HIV தொற்று உள்ளவர்களுடன் பாலுறவு கொள்வது HIV தொற்றை ஏற்படுத்துகிறது.

(ii) HIV தொற்று உள்ளவர்களுடன் ஒன்றாக வசிப்பதோ அல்லது உணவைப் பகிர்ந்துகொள்வதோ HIV தொற்றை ஏற்படுத்தக்கூடும்.

(iii) கைகுலுக்குதல், இருமல், தும்மல் மற்றும் கழிப்பறைகளைப் பகிர்ந்துகொள்வதன் மூலமும் HIV பரவக்கூடும்.

(iv) HIV தொற்று உள்ளவர்கள் பயன்படுத்திய ஊசிகள் மற்றும் சிரிஞ்சுகளைப் பயன்படுத்துவதன் மூலம் இந்நோய் பரவக்கூடும்.

(A) (i), (iii)
(B) (ii), (iii)
(C) (i), (iv)
(D) (iii), (iv)

**72.** வவ்வால்களிலிருந்து மனிதர்களுக்குப் பரவக்கூடிய நோய்:

(A) நிபா  (B) பிளேக்
(C) ஒமிக்ரான்  (D) புற்றுநோய்

**73.** குழந்தைகளிடம் தொழுநோயை, நோயின் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து குணப்படுத்தும் நோக்கத்துடன் தொடங்கப்பட்ட அரசுத் திட்டம்:

(A) விமுக்தி  (B) சாந்த்வனம்
(C) காருண்யா  (D) பாலமித்ரா

**74.** பல்வேறு செயல்பாடுகளைச் செய்வதற்குத் தேவையான ஆற்றலை, நமது உணவிலுள்ள ஊட்டச்சத்து நிறைந்த தானியத்திலிருந்து நாம் பெறுகிறோம். அதிக அளவு தானியங்களைக் கொண்ட உணவுகள் எவை?

(A) அரிசி, கோதுமை, மரவள்ளி  (B) மரவள்ளி, மீன், எண்ணெய்கள்
(C) பழங்கள், காய்கறிகள்  (D) பால், பால் பொருட்கள்

75. COVID-19 தொடர்பான கூற்றுகளை ஆராய்ந்து, சரியானவற்றைத் தேர்ந்தெடுக்கவும்:

(i) COVID-19 என்பது கொரோனா வைரஸால் ஏற்படுகிறது

(ii) இந்நோயைத் தடுக்க Covishield மற்றும் Covaxin தடுப்பூசிகள் பயன்படுத்தப்படுகின்றன

(iii) RT-PCR என்பது COVID தொடர்பான ஒரு பரிசோதனையாகும்

(iv) COVID-19 தொற்றக்கூடியது அல்ல

(A) (i), (ii), (iii) சரியானவை

(B) (i), (ii), (iv) சரியானவை

(C) (i), (iii), (iv) சரியானவை

(D) (ii), (iii), (iv) சரியானவை

76. பின்வருவனவற்றுள் தனித்து நிற்பது எது?
B.C.G., E.C.G., O.P.V., M.M.R.

(A) B.C.G.
(B) E.C.G.
(C) M.M.R.
(D) O.P.V.

77. கொழுப்பில் கரையாத வைட்டமின் எது?

(A) வைட்டமின் C
(B) வைட்டமின் D
(C) வைட்டமின் A
(D) வைட்டமின் K

78. சிறுநீர்ப் பாதை நோய்களுக்கான காரணங்கள்:

(i) சிறுநீர் கழிக்கத் தேவை ஏற்படும்போது சிறுநீர் கழிக்காமல் இருத்தல்

(ii) தாகம் எடுக்கும்போது தண்ணீர் குடிக்காமல் இருத்தல்

(iii) முறையற்ற சுகாதாரப் பழக்கவழக்கங்கள்

கொடுக்கப்பட்டுள்ள காரணங்களைப் படித்து, சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

(A) (i) தவறு, (ii), (iii) சரி

(B) (ii), (iii) தவறு, (i) சரி

(C) (i), (ii), (iii) சரி

(D) (i), (ii) சரி, (iii) தவறு

79. பற்கள் உடலிலேயே மிகவும் கடினமான உறுப்புகளாகும்; இவை மண்ணில் நீண்ட காலம் வைக்கப்பட்டிருந்தாலும் சிதைவடைவதில்லை. இருப்பினும், வாயினுள் இவை சிதைவடைவதற்குக் காரணமானவை _________ ஆகும்.

(A) பாக்டீரியாக்கள்
(B) ஒட்டுண்ணிப் புழுக்கள்
(C) புழுக்கள்
(D) வைரஸ்கள்

80. கொசுக்களால் பரவும் நோய்; கடுமையான காய்ச்சல், தாங்க முடியாத தலைவலி, கண்களுக்குப் பின்னால் வலி, நெஞ்சு மற்றும் முகத்தில் சிவப்புப் புள்ளிகள் தோன்றுதல்; மேலும் கடுமையான பாதிப்புகளில், இரத்தத்தில் உள்ள இரத்தத் தட்டணுக்களின் எண்ணிக்கை குறைதல் மற்றும் மரணம் கூட ஏற்படலாம். இவை நமது நாட்டில் காணப்படும் ஒரு காய்ச்சலின் அறிகுறிகளாகும். அது எந்தக் காய்ச்சல்?

(A) எலிக்காய்ச்சல்
(B) சிக்குன்குனியா
(C) டெங்கு காய்ச்சல்
(D) ஸ்க்ரப் டைபஸ்

**81.** ஒரு வகுப்பில் உள்ள 40 குழந்தைகளின் சராசரி வயது 11 ஆகும். ஆசிரியரும் இதில் சேர்க்கப்படும்போது, சராசரி வயது 12 ஆக மாறுகிறது. ஆசிரியரின் வயது என்ன?

(A) 52 (B) 45

(C) 50 (D) 51

**82.** $^{3}/_{4}$ லிட்டர் கொள்ளளவு கொண்ட பாட்டில்களில், $5\,^{1}/_{4}$ லிட்டர் தண்ணீர் நிரப்பப்பட உள்ளது. இதற்கு எத்தனை பாட்டில்கள் தேவைப்படும்?

(A) 5 (B) 7

(C) 10 (D) 6

**83.** 1-லிருந்து தொடங்கும் எத்தனை ஒற்றைப்படை எண்களின் கூடுதல் 2601 ஆகும்?

(A) 25 (B) 26

(C) 41 (D) 51

**84.** மணிக்கு 90 கி.மீ வேகத்தில் செல்லும் 125 மீ நீளமுள்ள ஒரு ரயில், 175 மீ நீளமுள்ள ஒரு பாலத்தைக் கடக்க எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்ளும்?

(A) 12s (B) 7s

(C) 2s (D) 5s

**85.** 3600-இன் காரணிகளின் எண்ணிக்கை என்ன?

(A) 100 (B) 45

(C) 10 (D) 50

**86.** ஒரு நீள்சதுரத்தின் பரப்பளவு 3.25 மீ$^2$. அந்த நீள்சதுரத்தின் நீளம் 2.5 மீ எனில், அதன் அகலம் என்ன?

(A) 13 மீ (B) 1.3 மீ

(C) 0.13 மீ (D) 1.03 மீ

**87.** 7, 3, 2 மற்றும் $x$ ஆகிய இலக்கங்களைக் கொண்டு உருவாக்கப்படும் ஒரு நான்கு இலக்க எண் 9-ஆல் வகுபடுமானால், $x$ -இன் மதிப்பு என்ன?

(A) 1 (B) 2
(C) 3 (D) 6

**88.** இரண்டு எண்களின் கூடுதல் 30, அவற்றின் மீச்சிறு பொது மடங்கு (LCM) 36 மற்றும் மீப்பெரு பொதுக் காரணி (HCF) 6 ஆகும். அந்த எண்களின் தலைகீழிகளின் (Reciprocals) கூடுதல் என்ன?

(A) 5/12 (B) 5/18
(C) 5/24 (D) 5/36

**89.** 1 முதல் 10 வரையிலான எண்கள் பெருக்கப்படுமானால், அந்தப் பெருக்கற்பலனின் கடைசி எத்தனை இலக்கங்கள் 0-ஆக இருக்கும்?

(A) 2 (B) 1
(C) 3 (D) 5

**90.** ரூ. 5,000 என்று குறிப்பிடப்பட்ட ஒரு எரிவாயு அடுப்பு 10 சதவீதம் தள்ளுபடியில் விற்ற போது, அதில் 20% இலாபம் ஈட்டப்பட்டிருந்தால், அந்த அடுப்பு எவ்வளவு விலைக்கு வாங்கப்பட்டிருக்கும்?

(A) 4,500 (B) 5,500
(C) 5,750 (D) 3,750

**91.** 15 $- 4 + 8 \times 3 + 5$ :

(A) 8 (B) 75
(C) 62 (D) 40

**92.** கீழே கொடுக்கப்பட்டுள்ள தொடரின் அடுத்த உறுப்பைக் கண்டறியவும் :
1, 1, 2, 3, 5, 8, 13, ———

(A) 21 (B) 28
(C) 20 (D) 19

**93.** பின்வரும் எண்களில் எது இந்தக் குழுவில் இடம்பெறவில்லை?
1225, 2025, 3025, 5225, 7225, 9025

(A) 1225 (B) 5225
(C) 3025 (D) 9025

**94.** ஒரு வரிசையில், மனு முன்பக்கத்திலிருந்து பத்தாவது இடத்திலும், பின்பக்கத்திலிருந்து பன்னிரண்டாவது இடத்திலும் உள்ளார். அந்த வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?

(A) 22 (B) 21
(C) 23 (D) 20

**95.** ஜோபியால் 15 நிமிடங்களில் 1 கி.மீ நடக்க முடியுமெனில், 1 மணி நேரத்தில் அவர் எத்தனை கி.மீ நடப்பார்?

(A) 15 (B) 2
(C) 4 (D) 5

**96.** APU, BRV, CTW, DVX என்ற வரிசையில் அடுத்து வருவது எது?

(A) EWY (B) EXY
(C) EXZ (D) EYZ

**97.** 2, 6, 12, 20, 30, ——

(A) 40 (B) 42
(C) 36 (D) 41

**98.** பின்வருவனவற்றுள், அடுத்தடுத்த நான்கு முழு எண்களின் கூட்டுத்தொகையாக இருக்க மிகவும் சாத்தியமான எண் எது?

(A) 36 (B) 46
(C) 33 (D) 45

**99.** தந்தையின் வயது, மகனின் வயதின் மூன்று மடங்கை விட 3 குறைவாக உள்ளது. 12 ஆண்டுகளுக்குப் பிறகு, தந்தையின் வயது மகனின் வயதைப் போல இரு மடங்காக இருக்கும். மகனின் தற்போதைய வயது என்ன?

(A) 15 (B) 14
(C) 13 (D) 12

**100.** மூன்று தொடர்ச்சியான ஒற்றைப்படை எண்களின் கூடுதல் 45 எனில், அவற்றுள் மிகப்பெரிய எண் எது?

(A) 13 (B) 15
(C) 17 (D) 19

SPACE FOR ROUGH WORK

**SPACE FOR ROUGH WORK**